


THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 29th September 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Fixation of tenancy rights and rent

*1891 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குத்தகை, வார பாத்தியதையை (tenancy right) நிர்ணயிக்கச் சட்டம் கொண்டுவரும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI S. M. ANNAMALAI : இந்தச் சட்டமன்ற காலம் முடிவடைவதற்குள் இந்த மசோதாவைக் கொண்டுவர முடியுமா ? நியாயவாரத்தை உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பிற்பாடு Tenancy Legislation வரும்போது கவனிக்கப்படும் என்று அன்றே கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுபற்றிய விஷயங்கள் தெளிவான பிற்பாடு இதைக் கொண்டுவரமுடியும்.

State Transport service during taxi drivers' strike

*1892 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the measures taken by the State Transport department for providing additional transport facilities during taxi drivers' strike in the Madras City from 24th July 1961?

THE HON. SRI V. RAMAIAH : Six special buses each from Egmore and Central Stations to important destinations, viz., Mylapore, Thiyagarayanagar, Ayyanavaram, Perambur, Tondiarpet and Hamilton Bridge were operated by the Madras State Transport Department in the mornings. In the evenings the special buses were operated from these termini to the stations. The timings of the special services were so arranged as to meet the incoming trains and take the intending passengers for outgoing trains. Luggage was also permitted to be carried in all the buses plying in the city and touching the railway stations.

SRI M. KALYANASUNDARAM : இந்த ஏற்பாடு பொதுமக்களுக்கு மிகவும் உபயோகமாக இருந்தது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் இதைத் தொடர்ந்து நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த சர்வீசை தொடர்ந்து நடத்துவதற்கு வேண்டிய முயர்ச்சி இந்த இலாகா எடுத்துக்கொண்டு வருகிறது என்ற தகவல் என்னிடம் இருக்கிறது.

[29th September 1961

Sri K. VINAYAKAM : Apart from the running of these extra buses between the Central Station and the termini and between Egmore Railway Station and the termini, was there not a proposal to train up police personnel to handle these taxi cabs in the event of a strike fructifying? May I know whether that proposal has been dropped? Will it not be better to train up the police personnel to use the taxi cabs in the event of a strike by the taxi-drivers?

The Hon. Sri V. RAMAIAH : I have no information in the matter with me just now. If the hon. Member puts a separate question, I can answer the question.

Sri M. KALYANASUNDARAM : ஏற்கெனவே போலீஸ் இலாகா மிகவும் செல்வாக்கிழந்திருக்கிறது. இதுமாதிரி தொழிலாளர்கள் போராட்டத்தில் அவர்களைக் கருங்காலிகளாக உபயோகப்படுத்தினால், மேலும் போலீசாரின் செல்வாக்கு குறையாதா ?

The Hon. Sri V. RAMAIAH : போலீசாரின் செல்வாக்கு குறைந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வதற்கில்லை. அவர்களை கருங்காலிகளாக உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொல்வதையும் ஒப்புக்கொள்வதற்கில்லை. சமுதாயத்தில் எந்த விதமான ஸ்தம்பிதமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதுதான் ஜனநாயகத்தின் பொறுப்பு. அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்க தயாராய் இருக்கிறது.

Sri K. B. S. MANI : பாயிண்ட் ஆப் ஆர்டர். இம்மாதிரி அதிகாரிகளை அதிலும் முக்கியமாக அட்மினிஸ்ட்ரேடிவ் டிபார்ட்மெண்டில் இருப்பவர்களை கருங்காலிகள் என்று குறிப்பிடுவது சபையின் ஒழுங்கை பாதிக்காதா ?

DEPUTY SPEAKER : The hon. Member has not referred to the name of any particular individual person. He has only criticised the department and he has got a right to do it. But, he cannot refer to any particular individual.

Sri V. K. KOTHANDARAMAN : சர்க்காரே டாக்சிகளை வைத்து நடத்துவதற்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் எத்தனை டாக்சிகள் முதலில் வைத்து நடத்தும் ?

The Hon. Sri V. RAMAIAH : ஸ்ட்ரைக் நடந்துக்கொண்டிருந்த போது பலவிதமான யோசனைகள் தெரிவிக்கப்பட்டது. சர்க்காரே இந்த டாக்ஸியை நடத்தவேண்டும் என்று சொல்லப்பட்டது. இன்னும் பெரிய ப்ளீட் ஓனர்கள் நடத்தினால் அது மக்களின் தேவையை திருப்திபடுத்த முடியும் என்றும் சொல்லப்பட்டது. எல்லா விஷயங்களும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

Sri M. KALYANASUNDARAM : அரசாங்கம் பஸ் போக்குவரத்தை நடத்துவதுபற்றி என்ன குறை சொன்னாலும், வேலை நிறுத்தம் என்ற தொல்லை இல்லை. இப்பொழுது தனியார் துறையில் நடத்துவதினால்தான் வேலை நிறுத்தம் எல்லாம் ஏற்படுவதினால், இதை பஸ் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டே எடுத்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri V. RAMAIAH : டாக்ஸியை அரசாங்கம் எடுத்து நடத்துவது சாத்தியமா என்பது நன்றாக பரிசீலனை செய்து முடிவிற்கு வர வேண்டிய விஷயம். தனியார் நடத்துவதினால் ஸ்ட்ரைக் ஏற்பட்டு இக்கட்டான நிலைமை உண்டாவதினால், அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொள்வதற்கில்லை.

29th September 1961]

SRI K. ANBAZHAGAN : தனிப்பட்டவர்கள் இந்த டாக்சிகளை நடத்துவதினால், இதில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் டிரைவர்கள் போலீசார் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டும், ஸ்ட்ரைக்கில் ஈடுபடுவதன் காரணமாக டிரைவர்கள் எல்லாம் சேர்ந்து கூட்டுறவு முறையில் இந்த டாக்சிகளை நடத்த முன்வந்தால், அரசாங்கம் அவர்களுக்கு பொருளாதார உதவி கொடுத்து ஆதரிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த உபகேள்வி மூலகேள்வியில் இருந்து எழவில்லையானாலும், கூட்டுறவு முறையில் யார் நடத்தினாலும் அரசாங்கம் உதவி செய்யும்.

SRI T. S. RAMASWAMI : ஸ்ட்ரைக் நடந்த காலத்தில், டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் ரயிலிலிருந்து வரும் பிராயாணிகளுக்கு வசதி செய்து கொடுத்ததே, அதைத் தொடர்ந்து நடத்தி வருகிறதா ? நிறுத்தப்பட்டதா ? இப்பொழுது நடத்தப்படவில்லை என்றால் திரும்பவும் நடத்த ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இதைத் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்வதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதுபற்றியெல்லாம் இந்த இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது.

SRI B. K. LINGA GOWDER : May I know whether any fleet-owners have come forward to run private taxis?

THE HON. SRI V. RAMAIAH : Sir, a suggestion has been made and that suggestion is under consideration. I am sure that when we take a decision, we won't be hard put to get fleet-owners to come forward.

State transport (revenue)

* 1893 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the net collection of the City Transport per day;

(b) whether there is any proposal to revise the fares and stages of the City Transport; and

(c) if so, the additional revenue or loss expected thereby?

THE HON. SRI V. RAMAIAH : (a) The average daily collection for July 1961 for city Transport is Rs. 52,200.

(b) No, Sir.

(c) Does not arise.

SRI N. K. PALANISAMI : தனிப்பட்டவர்கள் நடத்தும் பஸ்களில் அதிகலாபம் வருகிறது. ஆனால் அரசாங்கம் நடத்தும் பஸ்களில் குறைந்த லாபம் வருகிறதே அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் தினசரி வருமான அடிப்படையில் சொல்லுகிறார்களா, எப்படி ஒப்பிட்டுப்பார்த்தார்கள் என்பது தெரியவில்லை. இந்த உப கேள்வி மூல கேள்வியிலிருந்து எழவில்லை.

SRI A. A. RASHEED : Is there any proposal to run the City Transport on a 'no-profit no-loss' basis?

THE HON. SRI V. RAMAIAH : I do not see any reason why we should run it on that basis.